**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 03.11.2020**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 7983/E/2019**

திரு.M.தாஸ் ... மேல்முறையீட்டாளர்

/ எதிர் /

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருவில்லிபுத்தூர் வட்டம்,
விருதுநகர் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

மேல்முறையீட்டாளர் 22.03.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், விழுப்பனூர் போஸ்ட், திருமலாபுரம் கிராமம், கருப்பையா மகன் இராமர் கிணறு தோண்ட ஆட்சேபனை செய்த மனுவின் நகல், விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், விழுப்பனூர் போஸ்ட், பாட்டக்குளம் (இருப்பு) விழுப்பனூர் ரெவின்யூ கிராமம் VAO இராமசாமி அவர்கள் மேல்முறையீட்டாளர் கிணறு ஆழப்படுத்த செய்த மனு தொடர்பாக அளித்த அறிக்கையின் நகல் உள்ளிட்ட 2 இனங்களில் தகவல்களைக் கோரியதன்பேரில், பொதுத் தகவல் அலுவலர் தனக்கு எவ்வித தகவலும் வழங்கவில்லை என்று தெரிவித்து மேல்முறையீட்டாளர் 08.05.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பி வைத்துள்ளார். தொடர்ந்து 08.08.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார்.

2. அந்த மனு தமிழ்நாடு தகவல் ஆணையத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வரப்பெற்ற தேதியின் அடிப்படையில் காலவரிசை பட்டியலிட்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் விருதுநகர் மாவட்டத்தில் பல மாதங்கள் ஆகியும் முழுமையான தகவல் வழங்கப்படாமல் நிலுவையில் இருந்து வந்த மேல்முறையீட்டாளர்களின் மனுக்களின் மீது மாநில தகவல் ஆணையர் அவர்கள், விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களுடன் 29.09.2020 அன்று காணொலி காட்சி மூலம் விவாதிக்கப்பட்ட நிலையில், திருவில்லிப்புத்தூர் வட்டாட்சியர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளருக்கு 22.09.2020 தேதியிட்ட கடிதத்தில், தகவல்களை வழங்கியுள்ளதாகவும், அதனை மேல்முறையீட்டாளரின் மகள் செல்வி/திருமதி.ஞானவள்ளி அவர்கள் மனநிறைவுடன் பெற்றுக்கொண்டதாக ஏற்பளிப்பு செய்து கையொப்பமிட்டு கடிதம் அளித்துள்ளதாகவும் தெரிவித்து, அதற்கு சான்றாக அதன் நகல்களை இணைத்து அனுப்பி வைத்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளரின் மகள் செல்வி/திருமதி.ஞானவள்ளி அவர்கள் மனநிறைவுடன் தகவல்களை பெற்றுக்கொண்டதாக ஏற்பளிப்பு செய்துள்ளதன் அடிப்படையில், இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப்பதிவாளர்.**

**<u>வழக்கு எண்.SA 7983/E/2019</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருவில்லிபுத்தூர் வட்டம்,
விருதுநகர் மாவட்டம்.

**<u>மனுதாரர்</u>**
திரு.M.தாஸ்,
த/பெ.முத்தையா,
க.எண்.224/B, குமரன் தெரு,
இராஜபாளையம்,
விருதுநகர் மாவட்டம் - 626 117.

Copy to: Judgement File.
*"VP / PA -06.11.2020"*